உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி-5

எண்:47-185/சுகாதாரம்/உ.ந./2020-21 தேதி: 19-01-2021.

# அறிவிப்பு

பொருள்: உ.ந. சுகாதாரம் - தூய்மையின் கணக்கெடுப்பு 2021 – போட்டிகள் நடத்துவது – தொடர்பாக.

*****

மத்திய அரசு வருடா வருடம் தூய்மையின் கணக்கெடுப்பு (Swachh Survekshan) என்ற பெயரில் நாட்டில் உள்ள நகரங்களுக்கிடையே போட்டிகள் நடத்தி தரவரிசை வெளியிடுகிறது. இதில் நம் உழவர்கரை நகராட்சி சென்ற ஆண்டு 1 லிருந்து 10 லட்சம் மக்கள் தொகை கொண்ட நகரங்களுக்கிடையேயான பிரிவில் 171 வது இடமும், புதுச்சேரி மாநிலத்தில் **முதலிடத்தையும்** பெற்றுள்ளது. இதே போல் இவ்வாண்டும் நம் உழவர்கரை நகராட்சி இதில் கலந்து கொண்டுள்ளது. இதைப்பற்றி விபரங்கள் **http://swachhsurvekshan2021.org** என்ற மத்திய அரசின் இணையதளத்தில் உள்ளது.

இதன் தொடர்ச்சியாக நம் உழவர்கரை நகராட்சி எல்லைக்குட்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு சுற்றுப்புற தூய்மையின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கீழ்கண்ட போட்டிகளை நடத்தவுள்ளது.

| வரிசை எண் | போட்டியின் பெயர் | தலைப்பு |
|---|---|---|
| 1. | ஓவியம் / சுவரோவியம் | நீர் நிலைகள் / மற்றும் மரங்களின் அவசியம் |
| 2. | குறும்படம் (5 நிமிடம்) | பிளாஸ்டிக் பொருட்களினால் ஏற்படும் தீமைகள் (அல்லது) குப்பைகளை பிரித்துக் கொடுத்தல் |
| 3. | ஒலி வடிவ விழிப்புணர்வு (2 நிமிடம்) (Audio) | குப்பைகளை பிரித்து கொடுத்தலின் அவசியம் (அல்லது) திறந்த வெளி கழிப்பிடமில்லா புதுச்சேரி |
| 4. | சிறந்த கலை படைப்புகள் மற்றும் பழக்கங்கள் | வீணாகும் பொருட்களை கொண்டு கலைப்படைப்புகள் உருவாக்குதல் மற்றும் வீட்டிலேயே மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயாரித்தல். |

....2/-

**கலந்துகொள்ள வேண்டியவர்கள்**

பிரிவு (1) புதுச்சேரியில் உள்ள பள்ளி மாணவர்கள் மட்டும்

பிரிவு (2) புதுச்சேரியில் உள்ள கல்லூரி மாணவர்கள் மட்டும்

பிரிவு (3) உழவர்கரை நகராட்சிப் பகுதிகளில் உள்ள இல்லத்தரசிகள் மட்டும்.

மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் தங்கள் படைப்புகளை குறுந்து கட்டில் (DVD) ல் பதிந்து இரண்டு நகல்களை **ஆணையர், உழவர்கரை நகராட்சி, ஜவஹர் நகர், புதுச்சேரி – 605 005** என்ற முகவரிக்கு **29-01-2021 அன்று மாலை 5 மணிக்குள்** அனுப்ப வேண்டும். தங்கள் புகைப்படம், முகவரி, ஆதார் அட்டை நகல் ஆகியவை இணைக்க வேண்டும். சிறந்த படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசும், சான்றிதழும் அளிக்கப்படும்.

உழவர்கரை நகராட்சியின் முடிவே இறுதியானது. குறிப்பிட்ட தேதி / நேரத்திற்குப் பிறகு வரும் படைப்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலும், விபரங்கள் உழவர்கரை நகராட்சியின் இணைய தளத்தில் **www.oulmun.in.** காணலாம்.

**ஆணையர்**
**உழவர்கரை நகராட்சி**

---

மேற்கண்ட அறிவிப்பை தங்கள் பத்திரிக்கையில் வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

Kandasamy
19/1/2021

**(M. கந்தசாமி)**
**ஆணையர்**

A.Sangothari sys.33/e/JE1/competition(tamil)